முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1076

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.09.2022**, வெள்ளிக்கிழமை

1. வள்ளலாய் வாழுகின்ற ஞானியே
வரம்பல மக்களுக்கு அருளியே
இல்லாமை போக்கவந்த மாதவசியே
ஏழாம்படை வீட்டு ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 24 நாள், 09.09.2022 வெள்ளிக்கிழமை)
வரம்பல கலியுகத்தில் மக்களடைய
வாழுகின்ற காலமே உலக மக்களெல்லாம்
3. திறம்பட ஞானிகளாகி உலகை வெல்ல
தேசிகன் நீ அருளுகின்ற உபதேசமே
உபதேசமே கலியுகத்தின் வேதமாகும்
உயர்வான உன் தர்மமே
4. கலியிடரை வெல்லும் சக்தியாகும்
அழியாமை பெற வேண்டுமாயின்
உலகமக்கள் அவசியம் அரங்கன் உன்
நாமஜெபத்தை சொல்ல வேண்டும்
5. வேண்டிவேண்டி நீ வழிகாட்டுகின்ற
உயர்வான வழிகளை தர்மபாதையை
தெளிவுபட உலகோர் பற்றிவர
தொடர்ந்து அரங்கன் உன் அருள்பலம் பெற
6. பலம்பெற உலகோர் ஞானிகளாகி
பாருலகை காக்கும் மீட்கும்
மகாபலம் பொருந்தி இந்த கலியுகத்தில்
மாதவசி உன்னால் ஞானிகளாவதோடு
7. ஆவதுடன் ஞான ஆட்சி தருகின்ற
ஞானவான்கள் படைகளையும் உலகமெல்லாம் நிறுவி
இனிமைபட அரங்கன் உன் அவதாரத்தின் நோக்கமான
இயம்பிடுவேன் ஞான யுகமாற்றத்தைச் செய்து மகிழ்வர்
8. அன்னதனால் கலியுகத்தார் அரங்கன்
ஓங்காரக்குடில் நோக்கி வந்து
அண்ணலே அரங்கனே என வேண்டி வணங்கி
அடிபணிந்து அரங்கன்பால் சரணடைய

9. அடையவே இந்த கலியுகம்
அறிவிப்பேன் ஞான யுகமாக மாற்றம்
தெளிவுபட கண்டு ஞான ஆட்சி
தேசமெல்லாம் கண்டு உலகோர் சிறக்க நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–